Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# Bharathi and Feminism

**M. Aaisamma,** Assistant Professor of Tamil, M.S.S. Wakf Board College, Madurai,Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-4551-2590**
**DOI: 10.5281/zenodo.6619249**

## Abstract

*Feminist theory has been spread throughout the world. It paves way for the women's upliftment in various ways. Emancipation, equality, education must be catered to women. In addition to these, slavery of women should be eradicated. For these purposes, Feminist theory is essential. Even though these Feminist theories are propounded by various scholars throughout the world, they are perceived in India by Rajaram Mohan Rai and Periyar. Similarly great poet Bharathi gives more stress and had paved way for the upliftment of women. Bharathi remains as a revolutionary Tamilan, in propounding feminism through his revolutionary works. Through these works, he creates awareness to women and to decipher it is the notion of this article.*

**Keywords:** Feminism, Education, Equality.

## References

[1] Thiruvalluvar. *Thirukkural*. Maruthi Pathipagam.
[2] Bharathi. *Bharathyar Kavithaigal*. Manivachakar Pathipagam, 2000.
[3] Bharathi. *Phanchali Sabatham*. Kalachuvadu Pathipagam, 2016.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# பாரதியும் பெண்ணியமும்

**மு. ஆயிஷாம்மா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
மு.சா.ச.வக்பு வாரியக் கல்லூரி, மதுரை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-4551-2590
DOI: 10.5281/zenodo.6619249

**ஆய்வுச்சுருக்கம்**

*பெண்ணியக் கோட்பாடு இன்று உலகமெங்கும் பரவி வியாபித்துள்ளது. அஃது பல்வேறு வழிகளில் பெண்கள் மேன்மையுறுவதற்கு பயணப்பட்டுக் கொண்டே யிருக்கின்றது. பெண் விடுதலை, சமத்துவம், பெண் கல்வி போன்றவை மாதருக்கு கிடைத்திடவும், பெண்ணடிமைத்தனம் நீங்கவும் பெண்ணியக் கோட்பாடுகள் வழி முறைகள் கூறுகின்றன. இத்தகைய பெண்ணியக் கோட்பாடுகளைப் பற்றி உலகெங்கும் உள்ள சான்றோர் பலர் கூறியிருந்தப் போதிலும், இந்தியாவில் பெண்களின் முன்னேற்றத்திற்கு வழி கோரியவர்களான, இராஜராம் மோகன் ராய், பெரியார் போன்றவர்களின் வரிசையில் மகாகவி பாரதியாரும் இடம் பெறுகின்றார். பாரதி ஒரு புரட்சி தமிழனாக இருந்து பெண்ணியம் பற்றி தம் புரட்சிகரமான படைப்புகளின் மூலம் பெண்மைக்கே விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதாய் இக்கட்டுரை அமைந்துள்ளது.*

**திறவுச் சொற்கள்:** பெண்ணியம், கல்வி, சமத்துவம்.

**முன்னுரை**

ஆண்டவன் படைப்பில் அற்புதமான சிருஷ்டி பெண் அவளைக் காட்டிலும், மென்மையான, மேன்மையான படைப்பு வேறெதுமில்லை என்பது காந்தியடிகளின் கூற்று. பெண்ணிற் பெருந்தக்கயாவுள என்பது வள்ளுவரின் வாக்கு. 'பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்' என்று பாரதியாரும் கூறியிருப்பதால், பெண்ணின் சிறப்பை அறிய முடிகிறது. பெண்ணாக பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் என்றார் பாரதி. பெண்ணின் தியாகப் பண்பைப் பாராட்டும் விதத்தில் பிறந்த நாட்டைத் தாய்நாடு என்றும், பேசும் மொழியைத் தாய்மொழி என்றும், ஈன்றெடுத்த தாய், தந்தையர் என்கின்றபோது 'தாய்' என்றே முதலில் கூறியும் பெருமைப்படுத்தினர். தன்னைக் கொண்ட கணவனையும் காத்து இல்லறத்தை நடத்துபவளே பெண்.

**தற்காத்து தற்கொண்டாற் பேணித் தகைச்சான்ற**
**சொற்காத்து சோர்விலாள் பெண் (திருக்குறள் (56) வாழ்க்கைத்துணை நலம்)**

என்று வள்ளுவர் பெண்களைக் குறிப்பிடுகின்றார்.

**"நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும், திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால் செம்மை மாதர் திறம்புவதில்லையாம்" (புதுமைப்பெண்- பாடல் 7)** என்று தம் வருங்காலப் பெண்களைக் கனவு கண்டு மகிழ்ந்துள்ளார். அக்காலச் சான்றோர்கள், கவிஞர்கள் யாவரும் பாரதி போல வெளிப்படையாகத் தம் கருத்தைக் கூறவில்லை.

**பெண்ணியம்**

சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு நியாயம் கிடைத்திடவே,

பெண்ணியம் தோன்றியது, பெண்களுக்கு ஏற்படும் அவலங்களுக்கு மாற்று மருந்தெனவே தோன்றியுள்ள பெண்ணியம் பெண்களுக்கு வரப்பிரசாதமாய் அமைந்துள்ளது. இவ்வுலகத்தில் ஆண்களுக்கு நிகராக பெண்கள் சமூகத்தில் தலை நிமிர்ந்து வாழ முடியும் என்பதை மெய்ப்பித்துள்ளது. பெண்ணியம் பெண்கள் ஆண்களின் கைப்பாவைகளாய், பேசாமடந்தைகளாய், பெண்ணடிமைகளாய், குழந்தை பெறும் இயந்திரங்களாக கருதப்பட்ட காலக் கட்டத்திலிருந்து அவர்களை மீட்டு முன்னேற்றப் பாதையில் கொண்டு சென்றிட பெண்ணிய இயக்கம் பல வகைகளில் போராடி வருகின்றது.

பெண்ணியம் (Feminism) எனும் லத்தீன் சொல் பெண்ணியத் தன்மைகளிலிருந்து மருவி வந்தது. பெண் விடுதலையைக் குறித்து தனமும் இன்பமும் வேண்டும் தரணியில் பெருமை வேண்டும் கண் திறந்திட வேண்டும் காரியத்தில் உறுதி வேண்டும் பேசுகின்றது. பெண்ணியம் என்பதை அதன் கோட்பாடுகள் வழியே தத்துவமாக்க கண்டு, இயக்கமாக செயல்படுத்தும் போதே அதனை முழுமையாக புரிந்து கொள்ள இயலும். ஒவ்வொன்றையும் அதன்தன் நிலைகளிலிருந்து அறியும் போது, பெண்ணியத்தின் முழு பரிமாணத்தை அறிவதற்கு ஏதுவாகின்றது. பெண்கள் பல விதமான சித்ரவதைகளை அனுபவித்து, இன்னல்களே அவர்கள் வாழ்வில் தொடர்கதைகளாக இருந்து வந்த நிலையில், அவர்களை காத்திடவே தோன்றியது பெண்ணியம். பெண்கள் சமூகத்தில் தங்களுக்கென நிலையான இடத்தினைப் பெறுவதற்கு உறுதுணை புரிகின்றது இவ்இயக்கம். ஆண்களுக்கு நிகராகத் தரணியில் மாதரும் சாதனை புரிந்திட, தங்களுக்கு ஏற்பட்ட தோல்விகளையே வெற்றிப்படியாக மாற்றி வாழ்வில் உன்னதநிலை பெறலாமென்ற உத்வேகத்தை கொடுக்கின்றது பெண்ணியம். பெண் குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டு பெண் விடுதலைக்கெனப் போராடத்துவங்கிய நாளான 1908 ஆம் ஆண்டு மார்ச் 8-ஆம் தேதியை பெண்கள் தினமென அறிவிக்கக்கோரி, பெண்ணியப் போராளி ‘கிளாரா’ உலக நாடுகள் முன் 1910 ஆம் ஆண்டு கோரிக்கை விடுத்தார். அவரின் வேண்டுகோளுக்கிணங்கி, அங்ஙனமே உலகநாடுகள் 1911 ஆம் ஆண்டு மார்ச் 8-ஆம் தேதியை பெண்கள் தினமாக அனுசரிக்க அங்கீகாரம் அளித்தன. இங்ஙனம் தோன்றிய பெண்கள் தினத்தினால், பெண்கள் சமுதாயத்தில் தலை நிமிர்ந்து வாழவும், சாதனைகள் புரிந்து முன்னேறிட வழி வகுக்கின்றது பெண்ணியம்.

**பாரதியின் பெண்ணியப் பார்வை**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழந்த வள்ளலாரின் பாடல்கள் மாந்தரைக் கவர்ந்து இழுத்ததைப் போன்றே, மகாகவி சுப்பிரமணியப் பாரதியின் பாடல்களும் மாந்தரை ஈர்க்கின்றன. பாரதியாரின் பாடல்களில் சுதந்திர வேட்கையைக் கூறும் பாடல்கள் மிகுந்து இருந்தப் போதிலும், பெண்கள் நாநிலைத்தில் சிறப்புற நல்வாழ்வு வாழ்ந்திடப் பாடல்கள் புனைந்துள்ளார். பெண் விடுதலை, பெண்கல்வி, பெண்ணடிமை போன்றவற்றை தனது கவிதைகளில் பதிவு செய்துள்ளார். பெண்களிடம் விழிப்புணர்வு வேண்டும், கல்வி வளர்ச்சி வேண்டும் எனும் பாரதி, அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு? எனும் நிலை மாறி பெண்கள் வீறு கொண்டு எழுந்து, நிமிர்ந்த நடையும், நேர் கொண்டப் பார்வையுமாய் சமுதாயத்தில் அவர்கள் புதுமை பெண்களாகத் திகழ்ந்திட வேண்டும் எனும் கருத்தினை மாதர் முன் வைக்கின்றார். பெண் ஆனவள் ஓர் இரண்டாம் படைப்பு. அவள் திறமை சாலி அல்ல. தைரியசாலி அல்ல. உடல் பலமில்லாதவள். பாவப்பட்டவள் என்றே பெண்கள் பரிதாபக்குரிய நிலையில் இருந்தனர். இத்தகைய அவல நிலை மாறிட வேண்டும் எனும் பாரதி, பெண்களை சக்தியின் சொரூபமாகக்கண்டார். தமது பாஞ்சாலி சபதத்தில் பெண்ணை பாரதப் பெண்ணாகவே சித்தரிக்கின்றார்.

**தேவர்கள் பூச் சொரிந்தார் - ஓம்**

**ஜெய ஜெய பாரத சக்தி என்றே**

**ஆவலோடு எழுந்து நின்று – முன்னை**

**ஆரிய விட்டு மன் கை தொழுதான்**

என்று பெண்மைக்கு சக்தியின் வடிவம் அளிக்கின்றார். மேலும்,

**சக்தி சக்தி என்றால் சக்தி – தானே சேரும் கண்டரே**

**சக்தி சக்தி என்றால் வெற்றி – தானே நேரும் கண்டரே (சக்தி திருப்புகழ் - பாடல் 6)**

எனச் சக்தி பெருகிடும் போது அஃது ஜெயம்தான் எனத் தெளிவுப் படுத்துகின்றார். இத்தகைய சக்தி எனும் அதிக ஆற்றல் கிடைத்திடும் போது பெண்கள் தங்கள் வாழ்வில் ஏற்பட்ட சோதனைகளையே சாதனைகளாக மாற்றத் தள்ளப்படுகின்றனர்.

**பெண்ணிய போராட்டம்**

பெண்களுக்கு அவர்களது பிறப்பில் இருந்தே போராட்டம் தொடங்கி இறக்கும் வரை நீளுகிறது. பெண் திருமணத்திற்கு முன்னால் தந்தையைச் சார்ந்திருக்க வேண்டும். திருமணமானப்பிறகு கணவனைச் சார்ந்திருக்க வேண்டும். முதுமையில் பெற்றபிள்ளையைச் சார்ந்திருக்க வேண்டும் என்று காலம் காலமாகப் ஆண்களைச் சார்ந்த நிலையிலேயே சமூகம் வளர்த்து வந்துள்ளது. வறுமையில் வாடும் பெண்ணாக இருந்தாலும், அல்லது செல்வம் அதிகம் படைத்த பெண்களும் கூட வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொண்டாளே தவிர, பெண்களுக்கான உரிமைகளை பெறவில்லை. ஒழுக்கம், பண்பாட்டு இவற்றில் வழுவாது பெண்கள் எவ்வகை இன்னல்கள் வந்தாலும், இவற்றை கடைபிடித்து வாழ வேண்டும் என காட்டுப்பாடுகள் கொண்ட சமூகத்தைத்தான் நாம் காண்கிறோம் இப்புரையோடியிருந்த சமூகத்திற்கு விழிப்புணர்வு பெற மாதராய் பிறப்பதற்கே மாதவம் செய்திட வேண்டும் எனும் பாரதி பெண்களை இழிவு செய்வோரை, மாதர் தம்மை; இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் எனச் சூளுரைக்கின்றார்.

**பெண்ணென்று பூமிதனில் பிறந்து விட்டால்**

**மிகப் பிழையிருக்குதடி தங்கமே தங்கம் (கண்ணன் என் காதலன். பாடல்-7)**

என்று பெண் ஆனவள் பூமியில் பிறந்து விட்டால் இவ்வுலகில் பலவித துன்பங்களை அனுபவிக்கும் நிலை இருந்து வந்தக்காலத்திலேயே, பாரதி பெண் விடுதலை வேண்டும். மாதர் மனோ வலிமையுடன் உண்மையுடன் இருக்க வேண்டும் என்றே,

**“மனதில் உறுதி வேண்டும் வாக்கினிலே இனிமை வேண்டும்**

**நினைவு நல்லது வேண்டும் நெருங்கின பொருள் கை பட வேண்டும்**

**கனவு மெய்ப்படவேண்டும் கைவசமானது விரைவில் வேண்டும்.**

**பெண் விடுதலை வேண்டும் பெரிய கடவுள் காக்க வேண்டும்.**

**மண் பயனுற வேண்டும் வாகை மிங்கு தென்பட வேண்டும்**

**வாகைமிங்கு தென்பட வேண்டும் உண்மை நின்றிட வேண்டும்”**

பாடும் பாரதி பெண் உரிமையின் மகத்துவத்தை உணர்த்துகின்றார். பெண்களை ஆண்கள் வெறும் போதப் பொருள்களாகப் பாவித்து, அவர்களை அடிமைப்படுத்தி வந்த நிலை மாற வேண்டும் என்பதினை, “பெண்டாட்டி தன்யைடிமைப் படுத்த வேண்டி “பெண் குழந்தை முழுதடிமைப் படுத்தலாமோ?” ஆணித்தரமாகச் சொல்கின்றார்.

‘தாய் மாண்பு’ குறித்து

**‘தாய்க்குமே லிங்கேயோர் தெய்வ முண்டோ?**
**தாய் பெண்ணே யல்லளே? தமக்கை, தங்கை**
**வாய்க்கும்பெண் மகவெல்லாம் பெண்ணே யன்றோ?**
**மனைவி யொருத் தியையதமைப் படுத்த வேண்டித்**
**தாய்க் குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ? (பராசக்தி துதி-பாடல் – 46)**

எடுத்துரைக்கின்றார். இவ்வாறு கூறும் பாரதியே, ‘காதலின் புகழ் பாடுகின்றார்.

**“காதலினால் மாறுடர்க்கு கலவியுண்டாம்**
**கலவியிலே மானுடர்க்கு கவலை தீரும்**
**காதலினால் மானுடர்க்கு கவிதை யுண்டாம்**
**கான முண்டாம் சிற்பமுதற் கலைக்க ளுண்டாம்**
**ஆதலினாற் காதற் செய்வீர் உலகத்தீரே”**

அவரே பெண்களிடம் மட்டுமே கற்புநிலை என்று சமுதாயத்தில் என்றிருந்த நிலைமாறி இருபாலருக்குமே அஃது வேண்டும் என்றே

**“கற்பு நிலை என்று சொல்லவந்தால் இரு**
**கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்”**

என்கிறார்.

**முடிவுரை**

பாரதி தம் புதிய ஆத்திச்சூடியில் ‘தையலை உயர்வு செய்’ என்கின்றார். எங்கெல்லாம் பெண்மை மதிக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் மனித நேயம் போற்றப்படும் என்பதனை வலியுறுத்துகின்றார். கற்பென வந்தால் இருபாலருக்கும் பொதுவில் வைப்போம் என்றுரைத்தவர் பாரதியார். ஏனெனில், ஆணெல்லாங் கற்பை விட்டுத் தவறு செய்தால், அப்போது பெண்மையுங்காற் பழிந்திடாதோ? என்று வினவுகிறார். முடிவாக, பாரதி பெண்மையினைப் போற்றி மதிக்கின்றார். பெண்ணை அடிமைப்படுத்துவது என்பது நம்மை நாமே அடிமைப்படுத்துவதற்குச் சமம் என்கிறார். சமூகச் சீர் கேடுகளுக்கும், பிரச்சினைகளுக்கும் மூலகாரணம் ஆண்களே ஆண் ஒழுக்க நெறியுடன் வாழ்ந்தாலே போதும். ஏனெனில் பெண்கள் எல்லோரும் போற்றதற்குரியவர்களே என்கிறார். பெண்மையினைப் போற்றி வாழ்ந்தால் நாடு வளம் பெற்று முன்னேறும்.

**துணைநூற் பட்டியல்**

[1] *திருக்குறள்*, மாருதி பதிப்பகம்,

[2] *பாரதியார் கவிதைகள்*, மணிவாசகர் பதிப்பகம், 2000.

[3] *பாரதியார் பாஞ்சாலி சபதம்*, காலச்சுவடு பதிப்பகம், 2016.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.